# இனமானப் பேராசிரியர் நினைவு வாழ்க!



குன்றமைந்த தடந்தோள்கள்! பரந்த மார்பு!
குவிந்துறைந்த பேரறிவின் படர்ந்த நெற்றி!
நின்றுயர்ந்த செம்மாப்பு! புரட்சிப் பாட்டு
நெருப்புமிழ்ந்த பாவேந்தன் நடைச்செ ருக்கு!
வென்றெழுந்த தமிழ்வீறு! வெளிச்சப் பார்வை!
வெற்றிலைவாய்ச் சிதறாத புன்சி ரிப்பே!
அன்றிருந்தார்! வாழ்கின்றார் இன்றும் நம்முள்!
அவர்தாம்"பே ராசிரியர்" வணங்கு கின்றோம்!

முறுவல்பூத் தொளிர்கின்ற எழிலைப் பார்த்தும்
முழக்கமிட்டு வருகின்ற செயலைப் பார்த்தும்
நிறைதொண்ணூற் றாறுவய தான போதும்
நிமிர்ந்துவந்த பொலிவுகண்டும், இளமை என்ன
சிறைவைக்கப் பட்டதுவா? எனவி யந்தோம்!
சிந்திக்கப் பிறந்தமகன்! ஆன்றோ ருக்கும்
அறிவுப்பால் பொழிந்ததமிழ் அமுதக் கிண்ணம்!
அவர்தாம்"பே ராசிரியர்" வணங்கு கின்றோம்!

கொட்டாவித் தமிழனைத்தன் விடியல் ஓசைக்
குரலாலே துயிலெழுப்பும் மேடைப் பேச்சு!
கட்டான காளையர்தம் கையில் ஏந்திக்
கலாச்சார யுத்தத்தில் குதிப்ப தற்குப்
பட்டாளப் படைக்கலன்கள் அவரின் சொற்கள்!
பாமரர்க்கும் கல்விஒளி பாய்ச்சி வைத்தே
அட்டியின்றி வரலாற்றில் நிலைத்த செம்மல்!
அவர்தாம்"பே ராசிரியர்" வணங்கு கின்றோம்!

ஒப்புவமை இல்லாத உயர்பண் பாளர்!
ஒழுக்கநெறி நிறைந்தகுறட் சீலர்! நாட்டின்
தட்பவெப்ப சூழ்நிலைக்குத் தக்க வாறு
தமைமாற்றிக் கொள்ளாத கொள்கை வீரர்!
நட்பினுக்கோர் இலக்கணம்யார்? என்று கேட்டால்
நாடே"பே ராசிரியர்" எனமு ழங்கும்!
அப்பழுக்கில் லாதபகுத் தறிவுச் செம்மல்!
ஐயாநம் அன்பழகர் நினைவு வாழ்க!

கொற்றவன்போல் நடந்துவரும் கம்பீ ரத்தில்
கோட்டிமயம் தோற்றுவிடும்! தனது தோளில்
பற்றியுள்ள துண்டைத்தோள் மாற்றிப் போடும்
பாவனையில் பறிபோகும் பார்ப்போர் உள்ளம்!
அற்றகுளத் தின்பறவைக் கூட்ட மெல்லாம்
அகன்றோடும்! மீண்டும்வரும்! எண்ப தாண்டாய்
உற்றதுணை யாய்கலைஞர் அருகில் வாழ்ந்த
உன்னதப்பே ராசிரியர் நினைவு வாழ்க!

சோகமுட்கள் வேலாகத் தைத்த போதும்
சுடர்முகத்தில் ஒளிகுறையாக் கலைஞர் நெஞ்சில்
வேகம்,விசை யாய்மிளிர்ந்த வெப்பம் ஆனார்!
விழுதுகளின் வேரானார்! வெயில்பட் டாலே
காகிதப்பூ நிறம்மாறும்! நிலைமா றாத

கழகத்தின் குறிஞ்சிப்பூ வானார்! எந்தச்
சாகசமும் அவர்முன்னே தோற்றுப் போகும்!
சாயாத இலட்சியத்தின் உருவம் ஆனார்!

பல்லக்குத் தூக்கிகளும், பாதம் தாங்கிப்
பதவிசுக மோகிகளும் பறந்த நாளில்
சொல்லுக்கும் செயலுக்கும் வடிவம் தந்தே
சோதனையில் கழகத்தை மீட்கும் போரில்
புல்லர்க்குப் புலியாகி எதிர்த்து நின்ற
போர்க்குணத்தை மறப்போமோ? கழகத் தோழர்
இல்லத்தில் உள்ளத்தில் நிறைந்து வாழும்
இனமீட்புத் தூதுவரின் நினைவு வாழ்க!

ஈன்றார்க்குப் புகழ்சேர்த்த பெரியார் பிள்ளை!
இயக்கத்தில் அண்ணாவின் இனிய தம்பி!
தோன்றாநல் துணையானார் "தளப தி"க்கே!
தொண்டர்நம் தாய்மொழிக்கே! எமக்கோ ஆசான்!
ஆன்றோர்தம் சிந்தையிலே அன்புத் தோழர்!
அரசியலில் மாற்றாரும் போற்றி நின்ற
சான்றாளர்! தலைவர்கலை ஞருக்கு "மூத்த
சகோதரர்" பே ராசிரியர் நினைவு வாழ்க!



**கவிச்சுடர் கவிதைப்பித்தன்**

பாலாகத் தேனாகப் பழச்சா றாகப்
பருகும்இள நீராகப் போர்க்க ளத்தின்
வேலாக வாளாக ஈட்டி யாக
விரைந்துவரும் துப்பாக்கித் தோட்டா வாக,
மாலாக வைக்காமல், மயக்கம் தீர்க்கும்
மருந்தாக அறிவுவிருந் தாக, ஞான
நூலாகப் பீடுநடை போட்ட, எங்கள்
"நோற்றவப்பே ராசிரியர்" நினைவு வாழ்க!!

## நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் - மறைந்த கழக உறுப்பினர்கள் குடும்பத்திற்கு நிதியுதவி!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், மார்ச் 9 -

நாமக்கல் நகரில் உள்ள தி.மு.க. உறுப்பினர்கள் குடும்பத்தில் மறைந்த கழக உறுப்பினர்கள் குடும்பத்திற்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நிதியுதவி மற்றும் தி.மு.க. உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு உயர்கல்வி பயில முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சி நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் இனமான பேராசிரியர் கூட்ட அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் வரவேற்றார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், நகர தி.மு.க. செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவகுமார், பூபதி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கல்வி உதவித் தொகை மற்றும் மறைந்த கழக உறுப்பினர்கள் 52 குடும்பத்திற்கு தலா ரூ.10 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.5 லட்சத்து 20 ஆயிரம் மற்றும் கல்வி உதவித் தொகையாக 5 பேருக்கு ரூ. 3 லட்சம் நிதியுதவியை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகராட்சி மன்றத் தலைவர் து.கலாநிதி, சார்பு அணி நிர்வாகிகள் பொன். சித்தார்த், எம்பரர் வ. இளம்பரிதி, ப.கிருபாகரன், நாசர் பாஷா, கடலரசன் கார்த்தி, அருள், கௌதம், நகர் மன்ற கவுன்சிலர்கள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருநெல்வேலி மத்திய மாவட்டம்

### திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை பகுதி, 33வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை பகுதி, 33வது வட்டச் செயலாளர் சுப்ரீத் (எ) சுப்பிரமணியன் அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **பா.தளவாய்** (49ஏ, பெருமாள் மேலரத வீதி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி) அவர்கள் 33வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



சேலம் கிழக்கு மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றியத்தில் அ.தி.மு.க., பா.ம.க., பா.ஜ.க., ஆகிய கட்சிகளில் இருந்து 300 பேர் விலகி கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் முரா. கருணாநிதி ,மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம் , ஒன்றியச் செயலாளர்கள் சிவராமன், மருதமுத்து, மூர்த்தி, பேரூர் செயலாளர்கள் பாபு, வெங்கடேஷ், நரசிங்கபுரம் நகரச் செயலாளர் வேல்முருகன், தனசேகரன், செல்வமணி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தஞ்சை தெற்கு மாவட்டம்

### அதிராம்பட்டினம் கிழக்கு, அதிராம்பட்டினம் மேற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் மற்றும் நகரக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தஞ்சை தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட அதிராம்பட்டினம் நகரம், அதிராம்பட்டினம் கிழக்கு, அதிராம்பட்டினம் மேற்கு ஆகிய 2 நகரக் கழகங்களாக பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட இவ்வொன்றியங்களில், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகரப் பொறுப்பாளர் மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்சொன்னவாறு பிரிக்கப்பட்ட அதிராம்பட்டினம் கிழக்கு, அதிராம்பட்டினம் மேற்கு ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாக அமையும்.

**அதிராம்பட்டினம் கிழக்கு நகரம் (பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி) : வார்டுகள்** - *3, 4, 5,14, 15, 16, 21, 22, 23, 24, 25, 26, 27ஆகிய 13 வார்டுகள்*

**அதிராம்பட்டினம் கிழக்கு நகரம்**

பொறுப்பாளர் : **இராம. குணசேகரன்**
34/1, அண்ணா தெரு,
அதிராம்பட்டினம்,
தஞ்சை மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. எஸ்.பி.கோடி, மாரியம்மன்கோவில் தெரு, 2. இ.சரஸ்வதி, சுப்பிரமணியகோவில் தெரு, 3. டி.முத்துராமன், பழஞ்செட்டித் தெரு, 4. பி. காதர் இப்ராஹிம், ஆறுமுககிடங்கி தெரு, 5. பி.செய்யது முகம்மது, கடற்கரை தெரு.

**அதிராம்பட்டினம் மேற்கு நகரம் (பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி) : வார்டுகள்** - *1, 2, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 17, 18, 19, 20 ஆகிய 14 வார்டுகள்*

**அதிராம்பட்டினம் மேற்கு நகரம்**

பொறுப்பாளர் : **எஸ்.எச். அஸ்லம்,**
92ஏ, நடுத் தெரு, அதிராம்பட்டினம்,
தஞ்சை மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. என்.ஏ.முகம்மது யூசுப், மேலத் தெரு 2. சி. தில்லைநாதன், முத்தம்மாள் தெரு 3. ஏ.எம்.ஒய்.அன்சர்கான், புதுத் தெரு 4. திருமதி எஸ்.ரிபாயா, நடுத் தெரு 5.எம்.சேக்தாவூத், கீழத் தெரு.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

## இதுவரை ரூ.5 கோடியே 95 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாக உயர்த்தியும் வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் மருத்துவம் கல்வி உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வந்தது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 5 கோடியே 95 லட்சத்து 90 ஆயிரம்.** இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/–** (இரண்டு லட்சம்) 07–03–2024 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | இரா.தென்னவன்,<br>21, கீழத் தெரு, நெடுவாக்கோட்டை, திருவாரூர்614 014. | 25,000/– |
| 2. | இரா.பாலு, எம்.ஜி.ஆர்.நகர்,<br>சோமூர் அஞ்சல், மண்மங்கலம், கரூர் மாவட்டம். | 25,000/– |
| 3. | எஸ். குணசேகரன்,<br>அக்ரகாரம் தெரு, மணமேல்குடி, புதுக்கோட்டை மாவட்டம். | 25,000/– |
| 4. | ஒய்.பி.அசோக்குமார்,<br>ஏத்தாப்பூர் அஞ்சல், ஆத்தூர் வட்டம், சேலம்– 636 117. | 25,000/– |
| 5. | ஆர். சின்னதுரை,<br>கருந்தேவன்பாளையம், காடச்சநல்லூர், நாமக்கல்–638 008. | 25,000/– |
| 6. | எஸ்.சிலம்பரசன்,<br>சிக்களூர் கிராமம்அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி–636906. | 25,000/– |
| 7. | வே. வேடியப்பன்,<br>ஒட்டப்பட்டி கிராமம், காவேரிபட்டினம் வழி கிருஷ்ணகிரி | 25,000/– |
| 8. | மு.மாரியப்பன்,<br>காந்தி மாநகர், பீளமேடு, கோவை–641 004. | 25,000/ – |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

டி.ஆர்.சிவசங்கர் தனது சொந்த செலவில் வழங்கினார்! பெரம்பலூர் மாவட்டம்,

## கொளத்தூர் அரசு பள்ளிக்கு ரூ. 1 லட்சத்தில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்!

### ஒன்றிய பெருந்தலைவர் என்.கிருஷ்ணமூர்த்தி திறந்து வைத்தார்!

பெரம்பலூர், மார்ச் 9 -

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுக்கா, கொளத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இங்கு மாணவ, மாணவிகள் நலன் கருதி குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (ஆர்.ஓ) பொருத்த வேண்டும் என்று மாணவர்கள் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த கோரிக்கையை ஏற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை தனது சொந்த செலவில் பள்ளிக்கு வழங்கினார்.

மேலும் பொதுத் தேர்வு எழுதவுள்ள மாணவ, மாணவிகளுக்கு பேனா உள்ளிட்ட உபகரணங்கள், 250 பேருக்கு மதிய உணவு சாப்பிட தட்டு மற்றும் இனிப்பு, காரம் ஆகியவற்றை சுமார் ரூ.1 லட்சம் சொந்த நிதியில் டி.ஆர்.சிவசங்கர் வழங்கினார்.

இதில் ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும், ஆலத்தூர் ஒன்றிய பெருந்தலைவருமான என். கிருஷ்ண மூர்த்தி கலந்து கொண்டு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை இயக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) ஜெகநாதன், மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் சுந்தர்ராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வ.சுப்ரமணியன், ஒன்றிய அவைத் தலைவர் சாமிதுரை, எலந்தங்குழி ஊராட்சி மன்றத் தலைவர் அகிலா ராமசாமி, கொளத்தூர் கிளை நிர்வாகிகள் துரைமாணிக்கம், ராஜேந்திரன், கிராம நிர்வாக அலுவலர் முருகானந்தம், ஊராட்சி செயலாளர் பிரபு மற்றும் ஆசிரியர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.



கரூர் மத்திய மாநகர தி.மு.க. சார்பில் மார்ச் 1 இல் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கப்பட்டது. விழா ஏற்பாட்டாளர் கரூர் மாநகர மத்திய பகுதி கழக பொறுப்பாளர் வி.ஜி.எஸ். குமார், மாநகரச் செயலாளர் எஸ்.பி.கனகராஜ், மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மத்திய கிழக்கு செயலாளர் ஆர்.எஸ். ராஜா, தெற்கு செயலாளர் சுப்பிரமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் காலனி செந்தில், மாவட்ட துணைச் செயலாளர்கள் பூவை ரமேஷ் பாபு, மகேஷ்வரி சுப்பிரமணி, அரசு வழக்கறிஞர் விஜயகுமார், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.